இணைப்பு.

]7-ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 635க்கான விடையைக் காண்க].

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, மரம் நடுவிழா ஆண்டு தோறும் பெருமளவில் கொண்டாடப்பட்டு வருகிறது.

2. 1976 ஆம் ஆண்டிலிருந்து, நகரம் மற்றும் கிராமப் பகுதிகளில் வனவளம் பெருக்கும் வகையில் அரசு மற்றும் தனியார்த் தொழில் நிறுவனங்கள், கல்விக் கூடங்கள், மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், முதலான அமைப்புகளில் பெருமளவில் மரநடு விழா கொண்டாட திட்டமிட்டு செயலாக்கப் படுகிறது. இத்திட்டத்தில் வெற்றிபெற, வனத்துறை அதிக அளவில் நாற்றங்கால்களை, வைத்து கீழே கண்டுள்ள பல வகையான மரக் கன்றுகளையும் நாற்றுக்களையும் உற்பத்தி செய்து விற்பனைக்கு வழங்குகிறது:

மரம் மற்றும் நாற்று வகைகள்.

	Popular name.	Botanical name.
1.	பலா	(Artocarnus intrgri folia)
2.	மந்தாரை	(Bauninia species)
3.	பெருமூங்கில்	(Bambosa arundinacea)
4.	இலவம் பஞ்சு	(Bombex malabericum)
5.	சவுக்கு	(Casurinra equisetifilia)
6.	கல்மூங்கில்	(Dendrocalamus Stricts (Small Bamboo)
7.	தைலமரம்	(Eucalyptus hybrid)
8.	சில்வர் ஓக் (வெண் தேக்கு)	(Gerevillea robusta)
9	தேன்மரம்—தேன் பூச்சி மரம்	(Gaauznma tomentosa)
10.	பூ மருது	(Legerstroemia flos reginae)
11.	முருங்கை	(Moringa lindo[illegible]ia)
12.	கடுக்காய்	(Terminalia Chebula)
13.	பைன்	(Pinus patula)

1981 ஏப்ரல் 4]

	Popular name (1)		Botanical name (2)
14.	கொடைவேலன்	.. ..	(Accacia planifrons)
15.	மலைச்சவுக்கு	.. ..	(Accia Melanozylon)
16.	வேம்பு	.. .. ..	(Azadirachta Indica)
17.	முந்திரி	.. .. ..	(Anacardium occidentale)
18.	கருங்கொன்னை	.. ..	(Cassia marginata)
19.	பப்பையா	.. ..	(Carica papaya)
20.	குலமொஹர்	.. ..	(Poinciana regia)
21.	நெல்லி	.. .. ..	(Emblica officinalis)
22.	சந்தனம்	.. .. ..	(Santalum album)
23.	மாதுளம்	.. .. ..	(Punica granatum)
24.	அசோகா	.. .. ..	(Polvalthia longfolia
25.	புளி	.. .. ..	(Tamarindus indica)
26.	செம்மரம்	.. ..	(Pterocarpus Sonatalines)
27.	மரமல்லி	.. .. ..	(Milingitonia horten. sis)
28.	நீலகிரித் தைல மரம்	..	(Eucalyptus globulus)
29.	தேக்கு	.. .. ..	(Tectona grandis)

மேலே கூறிய திட்டச் செயலாக்கத்தின், சுருக்கத்தை அடியில் கண்ட அட்டவணையில் காணலாம் :

	பணி		நிதி	
	இலக்கு	சாதனை	இலக்கு	சாதனை
(1)	(2)	(3)	(4)	(5)
	(இலட்சத்தில்)		(இலட்சம் ரூபாய்கள்.)	
1976—77	6.00	23.00	2.30	1.98
1977—78	22.60	33.15	3.92	2.67
1978—79	25.00	20.19	4.25	2.08
1979—80	27.50	25.16	4.075	2·51

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றம் வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

/1981 ஏப்ரல் 4,

1980–81 ஆம் ஆண்டில், வனத்துறைக்கு நாற்றுக்கள் உற்பத்தி இலக்கு 50 இலட்சத்திற்கு நிர்ணயிக்கப் பெற்றது. இது வரையில், 42.05 இலட்சம் நாற்றுக்களை ரூ. 9 இலட்சம் செலவிட்டு, விற்பனைக்காக உற்பத்தி செய்துள்ளது.

விபரம் பின்வருமாறு

1980–81 ல் நாற்றுக்கள் உற்பத்தி.

(1)	இலக்கு (இலட்சங்களில்) (2)	விற்பனைக் காக. (3)
மதுரை	8.00	10.90
கோவை முதன்மை வனவிலங்கு வட்டம்	1.00	0.74
ஆராய்ச்சி வட்டம்	4.00	2.96
வேலூர்	7.00	8.12
திருநெல்வேலி	7.00	4.81
செயல்திட்டம்	1.00	0.40
கோவை	8.00	4.60
திருச்சி	8.00	6.90

மேலும், தொழிலகங்கள், தொழிற்பேட்டைகள், கல்வி நிலையங்கள், வீட்டு வசதி வாரியம், சென்னை மாநகர் மேம்பாட்டு நிறுவனம், கூட்டுறவுச் சங்கங்கள், மருத்துவமனைகள் முதலியவைகளின் நாற்றுக்கள், தேவையை அதிகரித்துள்ளதால், ரூ. 14.82 இலட்சம் செலவில் 105 இலட்சம் நாற்றுக்களை உற்பத்தி செய்ய அரசிற்கு செயற் குறிப்பு ஒன்றை வனத்துறைத் தலைவர் அளித்துள்ளார். இது, அரசின் பரிசீலனையில் உள்ளது. 1978–79 ஆம் ஆண்டில், விளம்பரப் பலகைகள் (Hoardings) மற்றும் ஒட்டிகள் (stickers) முதலியவைகள் மூலம், மரம் நடுதல் பற்றி விளம்பரம் செய்யப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டிலும், இவ்வாறே விளம்பரப் பணிகள் செய்யப்படும். 1980ல், நமது பிரதமர் 'ஒரு குழந்தைக்கு

ஒரு மரம்'' என்ற திட்டத்தினை செயல் படுத்த நம் முதல்வருக்கு கருத்துரை வழங்கியுள்ளார். இத்திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் செயல்படும் போது, அதற்குத் தேவையான மரக் கன்றுகளையும் நாற்றுக்களையும் வனத்துறை வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

———

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
17 AUG 1982